நாள்: **30.11.2022**

**O.S. 83 /2018**

**வா.சா.1**

**பெயர்: சேகர் (எ) ராஜசேகர் த/பெ. மாசிலாமணி**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது தகப்பனார் மாசிலாமணிக்கு 3 மகன்கள் மற்றும் 4 மகள்கள் என்றால் சரிதான். கோவிந்தசாமி பிள்ளை மற்றும் மாசிலாமணி பிள்ளை சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி அவர்களின் சொத்துக்கள் கும்பகோணம் ரோட்டில் வடசரகில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் மேற்கு பகுதியில் மாசிலாமணி பிள்ளை குடும்பமும், கிழக்கு பகுதியில் கோவிந்தசாமி பிள்ளை குடும்பமும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் இருவருக்கும் பிரிக்கும் வகையில் சுவர் உள்ளது என்றால் சரிதான். மாசிலாமணி பிள்ளை இடத்தில் ஆர்.சி.சி.வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் என்னால் கட்டப்பட்டுள்ளது. அதற்கான பிளான் மற்றும் அப்ரூவல் உள்ளதா என்றால் 1980 ல் கட்டப்பட்டது. பிளான் மற்றும் அப்ரூவல் இல்லை. 2 ம் பிரதிவாதியின் தந்தையார் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். TCL Temperary Casual Labour ஆக வேலை பார்த்தார். அவர் பணி நிரந்தரம் ஆகி விருப்ப ஓய்வு பெற்றார். 1980 கால கட்டத்தில் 1 ம் பிரதிவாதி பாலு வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அவர் தமிழ்நாடு போலீஸ் சிறப்பு காவல் படையில் பயிற்சியில் இருந்தார். அதன் பின்னிட்டு வெளிநாடு சென்றார் என்றால் சரிதான். சாந்தி என்டர் பிரைசஸ் கம்பெனிக்கு வேலைக்கு சென்றார். வெளிநாடு

சென்று பின்பு மீண்டும் சென்னை வந்து சாந்தி என்டர் பிரைசஸ் நிறுவனத்தில் வேலை பார்த்தார். பாலு என்பவர் ஜெயம் என்டர் பிரைசஸ் என்ற நிறுவனம் வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் 1990 க்கு பிறகு தொழில் செய்தார். 1990 க்கு பிறகு எனக்கு எந்தவிதமான தொழிலும் கிடையாது என்றால் நான் E.B.யில் கான்ட்ராக்ட் எடுத்து வேலை பார்த்து வந்தேன். 1990 ஆம் ஆண்டு கான்ட்ராக்ட் லைசென்ஸ் பதிவு செய்தேன். 1975 ல் இருந்தே சப் கான்ட்ராக்டராக வேலை செய்து வந்தேன். மேற்படி கான்ட்ராக்ட் லைசென்ஸ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கான்ட்ராக்ட் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தற்சமயம் வயதாகிவிட்டதால் கான்ட்ராக்ட் செய்யவில்லை. தாவா இடத்தில் உள்ள வீட்டில் தான் எனது சகோதர, சகோதரிகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் எனது தாயார், தந்தையார் இருவரும் என்னுடன் வசித்து வந்ததால் அவர்களுக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டில் நடைபெற்றது. வீட்டின் முன்பகுதியில் எனது தந்தையார் தையல் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அதில் மறுபகுதியில் நான் சைக்கிள் கம்பெனி வைத்து நடத்தி வந்தேன். மேற்படி வீடு ஒரே மேற்கூரை உடையது என்றால் ஆமாம். இரண்டு பகுதிகளாக வீடு தடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் எனது மூத்த சகோதரியின் மகளைத்தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மணிசங்கரின் தந்தை கருணாநிதி தாவா வீட்டில்தான் இறந்தார் என்றால், பரிதாபப்பட்டு பாதுகாப்பிற்காக தாவா வீட்டில் அவரை தங்க வைத்திருந்தோம் அதனால் அங்கு இறந்தார். காமராஜ் சாலையில் நான் குடியிருந்து வந்தேன் என்றால் உண்மைதான். திருமணம் ஆன பின்பு அந்த

வீட்டில் குடியிருந்து வந்தேன் என்றால் இல்லை. 1998 ல் வாங்கி 2002 வரை இருந்தேன். காமராஜர் நகர் என்பது கோயில் இடம். எனது சகோதரர் பாலு மாதா கோவில் தெருவில் குடியிருந்து வந்தார் என்றால் 1989, 1992 கால கட்டத்தில் அங்கிருந்து வந்தார். மேற்படி வீடும் நான்தான் பார்த்து கொடுத்தேன். எனது சகோதரிகள் திருமணமாகி அவரவர் கணவர் தனித்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா வீட்டில்தான் கருணாநிதியின் மகன் மற்றும் மகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் கொரனா கால கட்டத்தில் வந்து தங்கியிருந்த சமயத்தில் மகனுக்கு திருமணம் நடைபெற்றது. கருணாநிதியின் மகளுக்கு ஆரூரான் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. கருணாநிதியின் மகளுக்கு தாவா வீட்டில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்றால் எனது தாயார் அங்கு இருந்ததால் நடைபெற்றது. மணிசங்கருக்கு தாவா வீட்டில் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. நான் கலந்து கொள்ளவில்லை. எனது தந்தையார் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1997 ஆம் வருடம் வாக்கில். தாயார் 2002 ஆம் ஆண்டு இறந்தார். மேற்படி விலாசத்தின் கதவு இலக்கம் 2/61 பழைய எண். 1990 ல் இருந்து புதிய எண் 2/81 மற்றும் 2/82. 1980 ல் இருந்து வரி ரசீது ஒரே கதவிலக்கத்திற்கு கட்டப்பட்டதா என்றால் சரிதான். 1990 ல் இருந்து இரண்டு ரசீதாக கட்டப்பட்டதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் 2014 ல் இருந்து தாக்கல் செய்துள்ளேன். புல எண் 145/38 A ல் பவித்திரமாணிக்கம் திரு.வி.கா. நகரில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் 2002 க்கு பிறகு என் சம்பாத்தியத்தில் கடன் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நான் நிரந்தரமாக

புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் தற்போது மருத்துவ காரணங்களுக்காக எனது மனைவி, மகனுடன் அங்கு தங்கியுள்ளேன். அங்கு தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறீர்கள் என்றால் இல்லை வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். திரு.வி.கா. நகரில் உள்ள வீட்டை குமார் மனைவி மகேசுக்கு விற்பனை செய்து விட்டேன் என்றால் சரிதான். மாடியில் ஒரு வீட்டில் வாடகைக்கு தற்போது வரை இருந்து வருகிறேன். நான் நிரந்தரமாக புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றாலும், பிரதிவாதியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வீடு கருணாநிதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீல குடி கிராமத்தில் என்னால் எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்ட நிலத்தை பாலுவும், கருணாநிதியும் பிரித்துக்கொண்டு தனித்தனியே சென்று விட்டார்கள். நீலகுடியில் எனது தகப்பனார் பெயரில் எந்த நிலமும் இல்லை என்றால் சரியல்ல. கட்டப்பட்ட வீடு பாலுவின் சம்பாத்தியத்தால் கட்டப்பட்டது என்றால் இல்லை. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**